

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

*அ.எண்.289/2015*
*தேதி 07.12.2015*

# *வெள்ளத்தால் உருவான குப்பை மேடுகளை அகற்றும் பணி*
# *ச.ம.க. நிறுவனர் – தலைவர் ஆர்.சரத்குமார் MLA தொடங்கி வைத்தார்*

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிர்வாகிகள், அந்தந்த பகுதிகளில் மழை வெள்ள நிவாரண உதவிப்பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

இன்று காலை சைதாப்பேட்டை மேற்கு, 5 விளக்கு பகுதிகளிலும், ஜாபர்கான்பேட்டை பகுதிகளிலும், தொடர்ந்து 139, 140 வது வார்டு பகுதிகள் முழுவதும் குவிந்து கிடக்கும் குப்பைகளை மாநகராட்சி அதிகாரிகளின் ஆலோசனைப்படி, சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில், பொக்லைன்கள், லாரிகள் மூலம் அகற்ற ஏற்பாடு செய்யப்பட்டு, தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் நடக்கவுள்ள இந்த துப்புரவு பணிகளை சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனர் - தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அவர்கள் தொடங்கி வைத்தார்.

## *நடமாடும் மருத்துவ முகாம்*

அதே பகுதியில் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் நடமாடும் மருத்துவ உதவி முகாம் செயல்பட்டு வருகிறது. மருத்துவ உதவி முகாம் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு பகுதியில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.சிகிச்சையளித்து தேவையான மருந்து மாத்திரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

## *நிவாரண உதவிகள்*

அதேபோன்று குழந்தைகளுக்கு பிஸ்கட், பால்பவுடர், பெண்களுக்கு நாப்கின், தண்ணீர்பாட்டில் மற்றும் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டு வருகிறது.

துணைத் தலைவர் ஏ.நாராயணன், பொதுச் செயலாளர் கரு.நாகராஜன், பொருளாளர் ஏ.என்.சுந்தரேசன், கொள்கைப் பரப்புச் செயலாளர் ஆர்.ஜெயப்ரகாஷ், நிதி ஆலோசகர் டாக்டர்.ராஜசேகர், மகளிரணி துணைச் செயலாளர்கள் மா.ரா.ஜெமிலா, எம்.பாகீரதி, சென்னை மண்டல செயலாளர் .எம்.ஏ.சேவியர், மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் ராஜா, தென் சென்னை மேற்கு மாவட்ட நிர்வாகிகள் ஆதித்தன், கிச்சா ரமேஷ், ஜாபர்கான்பேட்டை பகுதி நிர்வாகிகள் அருள், ராஜா, கைலாஷ் ஆகியோர் என்னுடன் மேற்படி பணிகளில் ஈடுபட்டனர்.

நன்றி, வணக்கம்,



கரு.நாகராஜன்,
பொதுச்செயலாளர்.